**OS No. 21/2013 , நாள்: 16-02-2021**

போச்சம்பள்ளி மாவட்ட உரிமையியல் மற்றும் நீதித்துறை நடுவர் நீதிமன்றத்தில் வழக்கு விசாரணைக்கு எடுத்துக்கொள்ளப்பட்டது. சாட்சி திறந்த நீதிமன்றத்தில் அழைக்கப்பட்டு ஆஜர். நீதிமன்றத்தில் உதவியாளர் திருமதி.சரஸ்வதி அவரால் சாட்சியிடம் சத்தியபிரமாணம் செய்யப்பட்டது. உரிமையியல் விசாரணை சட்டம் பிரிவின் கீழ் விசாரணை செய்யப்பட்டார்.

| | | | |
|---|---|---|---|
| பெயர் | : ஆறுமுகம் | வயது | : 60 |
| தந்தை பெயர் | : ராமமூப்பர் | வேலை | : விவசாயம் |
| கிராமம் | : கீழ்குப்பம் | நாட்டினம் | : இந்து |
| தாலுக்கா | : போச்சம்பள்ளி | சாதி | : -- |

வா.சா.1 —— ஆறுமுகம் ஆஜர், முதன்மை விசாரணை :-

நான் இவ்வழக்கில் வாதி. நான் என்னுடைய பிரமாண வாக்குமூலத்தை தாக்கல் செய்கிறேன். அதை என்னுடைய முதல் விசாரணையாக ஏற்கவேண்டுகிறேன்.

இந்நீதிமன்ற அசல் வழக்கு எண்.166/2000-ன் வழக்குரையின் சான்றிட்ட நகல் வா.சா.ஆ.1 ஆகும். அசல் வழக்கு எண்.166/2000-ல் 1ம் பிரதிவாதியான நான் தாக்கல் செய்த எதிர்வழக்குரையின் சான்றிட்ட நகல் வா.சா.ஆ.2 ஆகும். 29.11.2012ம் தேதியிட்ட கணினி பட்டா (பட்டா எண்.496) வா.சா.ஆ.3 ஆகும். 21.11.2012ம் தேதியிட்ட கணினி பட்டா (பட்டா எண்.723) வா.சா.ஆ.4 ஆகும். 21.11.2012ம் தேதியிட்ட கணினி பட்டா (பட்டா எண்.729) வா.சா.ஆ.5 ஆகும். 21.11.2012ம் தேதியிட்ட கணினி பட்டா (பட்டா எண்.480) வா.சா.ஆ.6 ஆகும். 14.7.2000ம் தேதியிட்ட 15ம் பிரதிவாதி பெயரில் ஏற்பட்ட கிரயப்பத்திரத்தின் சான்றிட்ட நகல் வா.சா.ஆ.7 ஆகும். வழக்கு சொத்துக்களுக்கு 7.2.2007ம் தேதியில் நான் செலுத்திய கந்தாய ரசீது அசல் வா.சா.ஆ.8 ஆகும். வழக்கு சொத்துக்களுக்கான வில்லங்க சான்றிதழ் வா.சா.ஆ.9 ஆகும். தாவாப்படி தீர்ப்பாக வேண்டும்.